
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 2 | ஜூலை 1989 | இதழ் 7

பரிசுத்த



வேதாகமம்

வெளியிடுவோர் :

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்,

2, மணல்மேடு வீதி. ஈரோடு-638 002.

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638002

நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை
,, : ,, 11-00—12-00...ஞாயிறு பள்ளி
,, : மாலை 7-15—8-30...மாலை ஆராதனை
செவ்வாய் : மாலை 7-15—8-30...ஜெபக்கூட்டம் (மாதவக்காடு)
புதன் : மாலை 3-30—5-00 சகோதரிகள் ஐக்கிய கூட்டம்(ஒருவாரம்விட்டு ஒருவாரம்)
வியாழன் : மாலை 7-15—8-30...வேதாகம ஆய்வு
சனி : மாலை 7-00—9-00...மன்றாட்டு ஜெபம்

## இதழின் உள்ளே...


1. கிறிஸ்து கற்பித்த சமத்துவம் காப்போம்! 1
2. பரலோகத்தின் திறவுகோல் 5
3. பாவியாக வாழ்ந்து பரிசுத்தவானாய் மரிக்க முடியுமா? 9
4. பழைய ஏற்பாடு 12
5. இஸ்ரவேலை ஆண்ட அரசர்கள் 16
6 யூதாவை ஆண்ட அரசர்கள் 17
7. தெரிந்து கொள்ளுங்கள் 19
8. வேதாகமம் தேவனுடைய வார்த்தை 23
9. பிசாசு என்பவன் யார்? 26
10. பாவம் என்றால் என்ன? 27

# THIRUMARAI AASAAN

Editor:
E. Z. SELVANAYAGAM

Honorary Editor
J. C. CHOATE

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002. Tamil Nadu. India

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol 2. July — 1989 Issue 7


ஆசிரியவுரை

## கிறிஸ்து கற்பித்த சமத்துவம் காப்போம்!

''நீங்களோ 'ரபீ' என்றழைக்கப் படாதிருங்கள். கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார்; நீங்கள் எல்லாரும் சகோதரர்களாயிருக்கிறீர்கள். பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள், பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார். நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள், கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாக இருக்கிறார். உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக் கடவன்'' என்று இயேசு தம்மைப் பின்பற்றியவர்களுக்கு அறிவுரை கூறினார்.
(மத் 23:8–11.)

ஆனால் நாம் இன்று காண்பது என்ன? இயேசுவானவர் எவைகளை வேண்டாம் என்று தடை விதித்தாரோ அவைகளை நாங்களும் அவரைப் பின்பற்றுகிறோம் என்று கூறுகிற மக்களே அவைகளை மீறிச் செயல்பட்டுக்கொண்டு வருகிறதைப் பார்க்கிறோம். தேவபக்தியின் வேஷத்தைத் தரித்துக்கொண்டு அவரை வாழ்க்கையால் மறுதலிக்கிற இந்த மனிதர்கள் அவைகளைப் பற்றி வருத்தப்படவாவது செய்கிறார்களா என்றால் இல்லை என்றே தோன்றுகிறது,

யூத மார்க்கத்தில் உயர்வு தாழ்வுகள் ஒழுங்கு முறைகள், வகுப்பு வித்தியாசங்கள் இருந்தன. ஆசாரியர், லேவியர், சாதாரண மக்கள் என்ற பாகுபாடுகள் இருந்தன. அதே போன்று மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்ட சமயங்களிலும் ஆசாரியத்துவ முறை(குருக்கள்) சாதாரண மக்கள் என்ற பாகுபாடு நிலவுகிறது.

மனிதர்கள் அதிகாரத்துக்கும் ஆட்சிக்கும் ஆசைப்படுகிற இயல்புகளை உடையவர்கள். தங்களுடனே வாழும் சக மனிதர்களிடமிருந்து

மானை மரியாதைகளை எதிர்பார்க்கின்றனர். அது நமக்குப் புரிகிறது. ஆனால் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்கிற கூட்டத்தாரும், கிறிஸ்து வேண்டாம் என்று தள்ளின இவ்வேற்றுமை உணர்வுகளை ஊக்குவிக்கும் முறைகளைக் கூசாமல் பின்பற்றி உலகப் பிரகாரமாக ஒரு தலைவர், ஒரு தலைமைஸ்தலம், குருமார்களுக்குள்ளேயே ஏற்றத் தாழ்வு போன்றவைகளை உண்டாக்கி தலைவராயிருப்பவர்களுக்கு மற்றவர்கள் எல்லாரும் பணிந்து நடக்குமாறு செய்து திருப்தியடை-கின்றனர். இவைகள் மனிதர்களைப் பிரித்துவைத்து, சமத்துவ உணர்-வைக் கொல்லுகின்றன. வேறுபடுத்திக் காட்டுகின்றன. ஒருவரை மற்றவர்களைக் காட்டிலும் சிறப்பித்துக் காட்டுகின்றன.

இயேசுபெருமான் தானே முன்மாதிரியாக வாழ்ந்து காட்டி, மக்களுக்கு வகுத்தருளியுள்ள முழு நிறைவான நலம் பயக்கும் சமத்துவக் கோட்பாட்டிற்கும், மனிதத் தலைவர்களால் தோற்றுவிக்கப்பட்டு ஒரு மனிதனை மற்றவர்களைக் காட்டிலும் சிறப்பிக்கிற சமய சித்தாந்தக் கோட்பாட்டுக்கும் உள்ள வேறுபாட்டை ஒப்பு நோக்கிப் பாருங்கள். இயேசுவின் சிந்தனை யோட்டத்திற்கும், குறிக்கோள் இலக்கணத்-திற்கும் இவைகள் எல்லாம் எவ்வளவு முரணானவைகள் என்பது எளிதில் நமக்கு விளங்கும்.

கிறிஸ்தவ சமுதாயம் என்பது ஒரு குடும்பம். அதிலே அடிமைகளும் ஆண்டான்களும் இல்லை. சிறப்பு வணக்கத்துக்குரியவர்களும் இல்லை. மற்றவர்கள்மீது அதிகாரம் செலுத்தி ஆளுவதற்கு ஒருவருக்கும் உரிமை இல்லை. கடவுளின் நேரடி அன்பின் கீழும், பராமரிப்பின் கீழும் எல்லா மனிதர்களும் சம உரிமையுள்ளவர்களாக இருக்கிறோம்.

கடவுள் முன்னிலையில் ஒருவர் மற்றவர்களை விடப் பெரியவர் அல்லர். கடவுளின் கிருபை, ஆசீர்வாதங்கள் ஆகியவற்றைப் பெறுவதிலும் மனிதர் ஒருவரைவிட மற்றொருவர் சிறப்புச் சலுகை பெற்றவர் அல்லர். கிறிஸ்தவ உறவு முறையிலும் ஒருவர் மற்றவரைவிட பெரியவராக இருக்க இடமில்லை; இருக்க விரும்பவும் கூடாது. ஊழியம் செய்வதில் வேண்டுமானால் ஒருவர் மற்றவரைவிட அதிகமாக ஊழியம் செய்யலாம்; ஊழியத்திலே ஒருவர் பெரியவராக இருக்கலாம்.

எல்லோரும் மூத்த சகோதரராகிய இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தின் கீழ் இருக்கிறோம். அவர் மூலமாய் பிதாவினிடத்தில் சேருவதற்கு எல்லா மனிதருக்கும் சம உரிமை உண்டு. இயேசுகிறிஸ்-துவே 'நாம் அறிக்கை பண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியமாயிருக்கிறவர்' (எபி 3:1) அவருக்குக் கீழ் எல்லோரும் சம அந்தஸ்து உள்ள ஆசாரியர்களே. 1 பேதுரு 2:9; 5:1.) எந்த மனிதனுக்கும், தன் சகோதரனுக்கும் கடவுளின் சிங்காசனத்துக்கும் மத்தியில் நின்று தன் சகோதரனுக்கு ஓர் ஆசீர்வாதத்தைப் பெற்றுத் தருவதற்கோ அல்லது

அதனை மறுப்பதற்கோ அதிகாரமும் இல்லை; உரிமையுமில்லை. ஆவிக்குரிய எல்லா வாய்ப்புகளும் ஆசீர்வாதங்களும் குடும்பத்தலைவரின் அதிகாரத்தில் இருக்கின்றன. ஒவ்வொரு அங்கத்தினரும், அவர் அளவிலேயே அவருக்குத் திறந்துவிடப்பட்டுள்ள 'புதியதும் உயிருள்ளதுமான வழியின் மூலம் அதனிடம் செல்வதற்கு கட்டுப்பாடில்லாத உரிமையுண்டு.' (எபி 10:19-23)

கிறிஸ்துவுக்குள்ளான தன் சகோதரர்களுக்கும், கடவுளின் சிங்காசனத்திற்கும் இடையில் எந்த ஒரு மனிதனும் தன்னை நிறுத்திக் கொண்டு தன் மூலமாக கடவுளிடம் தன் சகோதரர்களுக்கு நன்மை பெற்றுத் தர முயல்வது இயேசுகிறிஸ்துவின் போதனைக்கு முரணானது. கடவுளின் ஆசீர்வாதத்தைப் பகிர்ந்தளிப்பதற்கு ஒரு ஸ்பெஷல் ரக மனிதர்கள் தங்களைத் தாங்களே மொத்த ஏஜண்டுகளாக நியமித்துக் கொள்வது எவ்வளவு நாகரீகமற்ற செயல்! கிறிஸ்து தமது அனைத்துச் சகோதரர்களும் பெற்று அனுபவிக்குமாறு தமது சொந்த இரத்தத்தைச் சிந்தி அருளிச் செய்துள்ள விலை மதிப்பிட முடியாத உரிமைகளையும், வாய்ப்புகளையும் இடைத்தரகர் போன்ற இந்தப் போலி மனிதர்கள் தம் கையில் எடுத்துக்கொண்டு விலை கூறுவதற்கும், விநியோகிப்பதற்கும் அனுமதிப்பது எவ்வளவு அறியாமை!

'நீங்கள் எல்லோரும் சகோதரர்களே'. இதுவே கிறிஸ்து நமக்கு அளித்துள்ள உரிமைப் பத்திரம்: இக் கிறிஸ்தவ ஜனநாயகம் எல்லா விதத்திலும் காப்பாற்றப்பட வேண்டும். சகோதரர்களுக்குள்ளே உயர்வு, தாழ்வு, வேற்றுமைகளைக் கற்பிக்கும் எந்த முயற்சியும் தகர்த்தெறியப் படவேண்டும். கிறிஸ்தவர்களுக்கு அவர்களின் ஒரே தலைவராகிய கிறிஸ்து வழங்கின பொருள் செறிந்ததும், முழுமையும், எளிமையும் நிறைந்த உரிமைகள், வாய்ப்புகள் பாதுகாக்கப்பட வேண்டும். இயேசுவே வேண்டாம் என்று ஒதுக்கிய ஆசாரியத்துவ முறையைப் புகுத்தி மெய்க் கிறிஸ்துவத்தின் தூய்மையை மாசுபடுத்தும் எவ்வித முயற்சியையும் அனுமதிக்கக் கூடாது. அப்படி அனுமதித்ததால் அன்றோ ஒரு சில சகோதரர்களை 'ரபீ' என்றும் 'பிதா' என்றும் 'போதகர்' என்றும் அழைக்குமாறு கட்டாயப்படுத்துகிறார்கள். இவர்களில் பெரியவர்களாயிருப்பவர்கள் மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதற்கு பதிலாக தங்களுக்கு ஊழியம் செய்ய மற்றவர்களை நிர்ப்பந்திக்கிறார்கள்.

இத் தொடர் கொடுமைகளை எதிர்த்துக் கொதித்தெழுந்த சில நல்லவர்களின் முயற்சியால் இக் கோணலாட்சி முறைகள் அவ்வப் பொழுது அம்பலப்படுத்தப்பட்டு தடுக்கப்பட்டதுண்டு. ஆனால் சிறிது காலம் சென்றபின் மீண்டும் சாத்தான் அவர்களை வஞ்சித்து விடுவான். அந்தப் பழைய கோணலாட்சி வேறு ரூபத்தில் துளிர்விடும். மீண்டும் குழப்பம். புதிய பெயரில் ஆதிக்கம் வளரும். கள்ளப் போதகங்கள் உள் நுழையும்,

சகோதரர்களே! இருபதாம் நூற்றூண்டு பல சாதனைகளைச் செய்து புகழ் பெற்று விளங்குகிறது. மார்க்க விஷயத்திலும் ஒரு நல்ல முயற்சியை நாம் ஏன் தொடங்கக்கூடாது? நாம் செய்யவேண்டியது அப்படியொன்றும் பெரிய புரட்சியில்லை; புதுமையுமில்லை: ஏற்கனவே பலர் நமக்கு முன்னேடிகளாக நடந்து காட்டிய பாதையில் நடைபோட வேண்டியது தான் 'மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு காரியங்கள் இப்படி இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்த பெரேயா பட்டணத்தாரைப் போல' (அப் 17:11) வேதாகமத்தைக் கவனமாய் ஜெப சிந்தனையுடன் படித்து கிறிஸ்துவின் போதனைகளைக் கூட்டாமல், கிழியாமல், கூட்டாமல், குறைக்காமல் பின்பற்றுவோம்! எவ்வளவு பெரியமனிதராக இருந்தாலும் சரி, எவ்வளவு உயர்மட்டக் குழுவா யிருந்தாலும் சரி, வேதாகம அடிப்படை, ஆதாரம், அங்கீகாரம் இல்லாமல் போடும் எந்தத் தீர்மானத்தையும், உத்தரவுகளையும் புறக்கணிப்போம்.

நினைவிருக்கட்டும், வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் உள்ள ஒரே தலைவர் இயேசுகிறிஸ்து. மத் 20;18. அவர் இயற்றிய சட்டங்களை, அவர் போதித்த உயர் நெறிகளை, மாற்றவும், கூட்டவும் குறைக்கவும் எந்த ஒரு மனிதனுக்கும், குழுவுக்கும் அதிகாரமும், உரிமையுமில்லை.

E. Z. செல்வநாயகம்.

---

# இஸ்ரவேலை ஆண்ட நியாயாதிபதிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஒத்னியேல் | நியாயா | 3:9-11 |
| 2. | ஏகூத் | ,, | 3:15-30 |
| 3. | சம்கார் | ,, | 3:31 |
| 4. | தெபோராள் & பாராக் | ,, | 4:4-9 |
| 5. | கிதியோன் | ,, | 6:11-40 |
| 6. | அபிமெலேக் | ,, | 9:1-54 |
| 7. | தோலா | ,, | 10:1,2 |
| 8. | யாவீர் | ,, | 10:3-5 |
| 9. | யெப்தா | ,, | 12:1-7 |
| 10. | இப்សான் | ,, | 12:8-10 |
| 11. | ஏலோன் | ,, | 12:11,12 |
| 12. | அப்தான் | ,, | 12:13-15 |
| 13. | சிம்சோன் | ,, | 15:20 |
| 14. | ஏலி | ,, | 1 சாமு 4:15,18 |
| 15. | சாமுவேல் | ,, | 1 சாமு 7:15 |
| 16. | சாமுவேலின் மக்கள் | ,, | 1சாமு 8:1-3 |

# பரலோகத்தின் திறவுகோல்

திறவு கோலைப்பற்றியும் அதன் பயனைப்பற்றியும் எல்லோருக்குமே தெரியும். நம்மில் சிலர் பல திறவுகோல்களையுடையவர்களாக இருக்கிறோம், அவற்றைக்கொண்டு வீடு, பெட்டி, பீரோ. மோட்டார் கார், ஸ்கூட்டர், சைக்கிள் போன்றவைகளை பூட்டவும் திறக்கவும் பயன்படுத்துகிறோம், அவைகளைக்கொண்டு நாம் சிலரை உள்ளே அனுமதிக்கவும் சிலரை வெளியே அனுப்பி விடவும் பயன்படுத்துகிறோம்,

வேதாகமம் கூட திறவுகோல்களைப்பற்றி சில இடங்களில் சொல்கிறது. அவைகளில் பிரபலமானது பரலோகத்தின் திறவுகோல். (மத் 16:16-19)பரிசுத்த வேதாகமம் சபையை தேவனுடைய வீடு என்று கூறுகிறது. (1 தீமோ 3;15 எபி 3:6) ஒரு, வீடு என்று இருந்தால் அதற்கு ஒரு பூட்டும் கூட இருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. அந்தப் பூட்டைத் திறந்து உள்ளே போவதற்கும் வெளியே வருவதற்கும் ஒரு திறவு கோலைப் பயன்படுத்துகிறோம். தேவனுடைய வீடு என்றும் மந்தை என்றும் சபை என்றும் வர்ணிக்கப்படுகிற தேவனுடைய இராஜ்ஜியத்திற்கும் கூட இயேசுகிறிஸ்துவே கதவும் வழியுமாக இருக்கிறேன் என்று கிறிஸ்துவே சொல்லியிருக்கிறார் (யோவான் 10:7:14:6.)

திருச்சபை என்பது தேவனுடைய அல்லது கிறிஸ்துவினுடைய ராஜ்ஜியம் என்று வேதம் கூறுகிறது. (கொலே 1:13) அந்த ராஜ்ஜியத்துக்கு திறவுகோல் உண்டு. அதைச்சரியாக பயன்படுத்தினால் பரலோக இராஜ்ஜியமாகிய சபையின் கதவைத் திறந்து உள்ளே பிரவேசிக்க முடியும்,

தம்மைக் குறித்து மக்கள் என்ன தான் நினைக்கிறார்கள் என்று அறிந்து கொள்ள விரும்பிய இயேசு ஒரு சமயம், செசரியா பிலிப்பி என்னும் நகரில் இருக்கும்போது, தம்முடைய சீடர்களிடம் தம்மை மக்கள் யார் என்று கூறுகிறார்கள் என்று கேட்டார். சிலர் எரேமியா என்றும், யோவான் ஸ்நானகன் என்றும் அல்லது ஏதோ ஒரு தீர்க்கதரிசி என்றும் கூறுவதாகச்சொன்னார்கள். மக்கள் சொன்னது ஓரளவு உண்மை ஆனால் அவர்கள் நினைத்ததுபோல் அவர் உலகில் வந்த மற்ற தீர்க்கதரிசிகளைப் போன்றவர் அன்று, ஏரோது அரசன் கூட தன்னால் சிரச்சேதம் செய்யப்பட்ட யோவான் தான் உயிரோடெழுந்து வந்துவிட்டானோ என்று நினைத்தான். ஆனால் அவைகளெல்லாம் உண்மை அல்ல.

பொதுமக்கள் நிலைமை இப்படியிருக்க தன்னோடு சுற்றித்திரிந்து தான் செய்கிற அற்புதங்களைப் பார்த்து தம்முடைய உபதேசங்களைக் கேட்டு தன்னோடு உண்டு உறங்கிய அப்போஸ்தலர்கள் தன்னை எந்த அளவுபுரிந்து கொண்டிருக்கிறார்கள் என அறிய நீங்கள் என்னை யார் என்று நினைக்கிறீர்கள் என்று கேட்டார்.

எப்போதுமே எல்லா விஷயத்திலும் முந்திக்கொள்ளுகிற சீமோன் பேதுரு தனக்காகவும் அப்போஸ்தலர்கள் சார்பிலும், நீர் ஜீவனுடைய தேவகுமாரன் என்றான், அவர்கள் தன்னைச் சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து மகிழ்ச்சியடைந்து, 'யோனாவின் குமாரனாகிய சீமோனே! நீ பாக்கியவான். மாமிசமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. பரலோகத்திலிருக்கிற என் பிதாவே இதை உனக்கு வெளிப்படுத்தினார்.

மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன். நீ பேதுருவாய் இருக்கிறாய். இந்தக்கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன் பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை' (மத் 16:13-18) எனக் கூறினார். இன்னும் மேலே நாம் செல்வதற்கு முன்பு இங்கே சொல்லப் பட்டுள்ள காரியங்களைச் சற்றே சிந்தித்துப் பார்ப்போம்.

முதலாவது இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டது பேதுருவுடைய புத்திக்கூர்மை என்று சிலர் பேதுருவைபாராட்டுவர். பேதுரு தலைவர்களுக்குள்ளே தலைவர் என்பதற்கு இந்நிகழ்ச்சி ஓர் நல்ல சான்று.பேதுரு தான் இதை வெளிப்படுத்தினாரென்றாலும் அது அப்போஸ்தலர்களுடைய மொத்தக் கருத்தின் பிரதிபலிப்பே, அப்படியில்லாமல் இருந்தால் அவர்கள் அக்கருத்து தங்களுக்கு உடன்பாடு இல்லை என்பதைத் தெரியப்படுத்தி யிருப்பார்கள்.

இரண்டாவது கிறிஸ்து இந்தக்கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன், என்று சொன்னது அந்த விசுவாச அறிக்கையின்மேல் என்று தான் சொன்னாரே தவிர பேதுரு மேல் என்று பொருள்பட அல்ல. பேதுரு என்றால் ஒரு சிறு கல் (Petros) கிறிஸ்து என்றால் உறுதியான அஸ்திபாரமான கற்பாறை(Petra). மேலும் இயேசுகிறிஸ்து பேதுரு அவ்வாறு சொன்னது உலக ஞானத்தைக்கொண்டோ அல்லது தன்னுடைய அறிவின் மேன்மையைக் கொண்டோ அல்ல. பரலோகத்தின் தேவன்தான் அதை அவருக்கு வெளிப்படுத்தினார் என்கிறார்.

அப்போஸ்தலர்களும் பேதுருவும் மற்ற இயேசுவோடு இருந்தார்கள். அவருடைய அற்புத அடையாளங்களைக் கண்டார்கள். அவருடைய போதனை சார்ந்த வாழ்க்கையைக் கவனித்தார்கள். ஆகவேதான் அவர்கள் அவரை தேவனுடைய குமாரன் என்று வெளிப்படையாக அறிக்கையிட்டார்கள். அந்த விசுவாச அறிக்கையை வைத்துத்தான் இயேசு தம்முடைய சபையைக் கட்டுவேன் என்று கூறினார். இன்றைக்கும் அந்த விசுவாச அறிக்கையின் பேரில் சபை கட்டப்பட்டு நிலைத்து நிற்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் அதை கொரிந்தியருக்கு எழுதின நிருபத்தில் குறிப்பிடுகிறார் "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திவாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது (1 கொரி 3:11.) அந்தக் கன்மலை கிறிஸ்துவே

(1கொரி10:4) அப்போஸ்தலன் பேதுருதாமே கிறிஸ்துவை, ஏசாயா தீர்க்கதரிசியின் உரையை மேற்கோள் காட்டி, மூலைக்கல் என்று வர்ணிக்கிறார் (1பேது 2:6: ஏசாயா 28:16) சிலர் போதிக்கிறதுபோல பேதுரு சபைக்கு அஸ்திபாரமுமல்ல, தலைவருமல்ல; அவர் அப்போஸ்தலரும் இயேசுவின் தொண்டர்களில் முக்கியமானவருமாக இருந்தபோதிலும் தவறு செய்யும் இயல்புள்ள மனிதனே (மத் 16:23) சபைக்கு தலைவராகவும் (எப 5:23) அஸ்திவாரமாகவும் (1கொரி3:11) இருப்பதற்கும் தகுதியுள்ளவர் கிறிஸ்து ஒருவரே. அவரே, அன்றும், இன்றும், என்றும் தலைவராக இருக்கிறார், இறுதியாக, கிறிஸ்து பேதுருவுக்கும் பரலோக இராஜ்ஜியத்தின் திறவுகோல்களை நான் உனக்குத்தருவேன் பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" என்று சொன்னார், (மத். 16:19,)

மேற்சொன்ன இந்த வசனத்தை வைத்துக்கொண்டு சிலர் பேதுருவிடத்தில் தானே திறவுகோலைத் தருவதாகச் சொன்னார். இப்பொழுதும் கூட நீங்கள் ரோமாபுரிக்குச் சென்று அங்குள்ள சிலைகளையும் சிற்பங்களையும் பார்த்தால் பேதுரு பரலோகத்தின் திறவு கோலை கையில் வைத்துக்கொண்டிருப்பதைப் போன்ற காட்சியைக் காண முடியும் என்று வாதிடுவர். அப்போஸ்தலனாகிய பேதுருவிடம் திறவுகோல் கொடுக்கப்பட்டது உண்மையே அவனிடம் மட்டுமல்ல ஏனைய அப்போஸ்தலர்களிடமும், அந்நாள் முதற்கொண்டு வேறு பலரிடமும் பரலோகத்தின் திறவுகோல் கொடுக்கப்பட்டது என்பதைக் கீழ்வரும் நிகழ்ச்சிகளின் மூலம் நாம் பார்க்கலாம்.

பேதுருவும் சரி மற்ற அப்போஸ்தலர்களும் சரி இயேசுவைப் பின்பற்றி அவருடைய சித்தத்தை நிறைவேற்றின அளவில் தான் அவர்கள் முக்கியமானவர்கள். மற்றபடி அவர்களுக்கு அதற்குமேல் வேறு அதிகமான அந்தஸ்து எதுவும் இல்லை.

அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் எருசலேமிலிருந்த அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று நாம் பார்க்கிறோம். அந்த நிகழ்ச்சியினால் அவர்களுக்கு இயேசு போதித்தவைகளை நினைவு கூறும் ஆற்றல், சகல சத்தியத்துக்குள்ளும் வழி நடத்தப்படும் ஆற்றல், அந்நிய மொழிகளில் பேசும் ஆற்றல், அற்புத அடையாளங்களைச்செய்யும் ஆற்றல் ஆகியவைகளைப் பெற்று, மக்கள் மத்தியில் தாங்கள் தேவனால் அவருடைய சித்தத்தை நிறைவேற்ற அனுப்பப்பட்டவர்கள் என்பதை நிரூபிக்க முடிந்தது.

அந்த வல்லமையின் காரணமாக பெந்தேகோஸ்தே நாளில் அங்கு கூடியிருந்த திரளான மக்களுக்கு கிறிஸ்துவைப் பிரசங்கித்தார்கள். அதைக் கேட்ட அம்மக்களும் தாங்கள் என்ன செய்யவேண்டும் என்று கேட்டார்கள், அதற்கு பேதுரு" மனந்திரும்பி நீங்கள் ஒவ்

வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப்பெறுவீர்கள்'' என்றார். (அப் 2:38)

அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையதினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். (அப் 2:47)

இங்கே நடந்த வற்றைச் சற்றே கவனியுங்கள். இங்கே பேதுருவும், அப்போஸ்தலர்களும் கர்த்தர் வாக்குத் கொடுத்த பரலோகத்தின் திறவு கோலைப் பயன்படுத்தி தேவனுடைய இராஜ்ஜியமாகிய சபையை திறந்தார்கள். பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு குழுமியிருந்த மக்களிடம், நீங்கள் இரட்சிக்கப்படவேண்டும்'' என்று பிரசங்கித்தார்கள், அதைக் கேட்டுக் கீழ்ப்படிந்தவர்களை கர்த்தர் சபையில் சேர்த்துக் கொண்டார். அங்கே அவர்கள் என்ன போதித்தார்களோ, அதாவது கட்டினார்களோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டது. இதுவே நமக்கு வசனங்களாக பரிசுத்த ஆவியான்வரால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அன்றைக்கு அந்த வார்த்தைக்கு என்ன அதிகாரம் இருந்ததோ அது இன்றைக்கும் இருக்கிறது. அது அன்று மனிதர்களைக் கட்டுமானால் அது-இன்றும் கட்டமுடியும் அதே போலத்தான் அன்று எவைகள் எல்லாம் கட்டவிழ்க்கப்பட்டதோ அவைகள் இன்றும் கட்டவிழ்க்கப்படும். உதாரணமாக கிறிஸ்துவுக்கு முன்னால் வாழ்ந்த யூத மக்களைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணமும் மற்ற சடங்காச்சாரங்களும் அன்று எப்படி கிறிஸ்தவர்களாகி விட்ட மக்களைக் கட்டவிழ்த்து விட்டதோ அதைப்போன்று இன்றும் நம்மையும் கட்டவிழ்த்து விடும். ஒருவர் இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்யவேண்டும் என்ற அறிவாகிய பரலோகத்தின் திறவுகோல் புதிய ஏற்பட்டின் வழியே நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது எவ்வளவு பெரிய பாக்கியம்.

தேவ சித்தத்துக்கு முரணாகவும், அவருடைய சித்தத்தினால் நமக்கு அருளப்பட்டிருக்கிற எளிமையான தெளிவான வெளிபாட்டுக்கு மாறாகவும் சிலபேர் இயேசுவின் பெயரால் தவறானவைகளைப் போதித்து கட்டவிழ்க்கப்பட்ட அநேக உபதேச சட்டங்களால் பல மக்களைக் கட்டி துன்புறுத்துகிறார்கள். வேறு சிலர் கட்ட வேண்டிய உபதேசங்களைக் கட்டவிழ்த்து விட்டு இயேசுவின் கட்டளைகளையும் உபதேசங்களையும் மீறும்படி தவறாகப் போதிக்கின்றனர். இப்படிக் கிறிஸ்துவின் உத்தரவு இல்லாமல் கட்டுகிறவர்களையும் கட்டவிழ்த்து விடுபவர்களையும், நினைக்கும்போது பரிதாபப்படுகிறோம். தேவனுடைய வார்த்தைகளோடு ஒன்றையும் கூட்டவோ குறைக்கவோ கூடாது என்றும் (வெளி22:18-19) எவ்வளவு பெரியவாராக இருந்தாலும், எவ்வளவு உயர்மட்டக்குழுவாக இருந்தாலும் சத்தியத்தை மாற்றிப்போதிக்க அதிகாரமில்லை என்றும் (கலா 1:7-9) வேதம் நம்மை எச்சரிக்கிறது.

(இதன் தொடர்ச்சி 18-ஆம் பக்கம் பார்க்க)

# பாவியாக வாழ்ந்து பரிசுத்தவானாய் மரிக்க முடியுமா?

ஞாயிறு பள்ளி வகுப்பில், லாசரு ஐசுவரியவான் கதையை, பிள்ளைகளுக்குச் சொல்லி முடித்தபின் சுவாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டிருந்த பிள்ளைகளைப் பார்த்து, லாசரு, ஐஸ்வரியவான் ஆகிய இருவரில் நீங்கள் யாரைப்போல் இருக்க விரும்புகிறீர்கள் என்று ஆசிரியை கேட்டார்.

ஒரு சிறுவன் எழுந்து சுட்டித்தனமாக 'இவ்வுலக வாழ்க்கையின் போது ஐஸ்வரியவானைப் போலவும், மரிக்கும்போது லாசருவைப் போலவும் இருக்க விரும்புகிறேன் என்று பதில் அளித்தான். இதைக் கேட்ட குழந்தைகள் எல்லாம் 'கொல்' என்று சிரித்து அவனைக் கேலி செய்தனர்.

அந்தப் பதிலில் இருந்த பொருத்தமின்மையை குழந்தைகள் புரிந்து கொண்டனர். பெரியவர்களாகிய நமக்குத்தான் விளங்குவதில்லை. ஆம், பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் காலமெல்லாம் பாவிகளாக வாழ்ந்துவிட்டு மரிக்கும்போது மட்டும் பரிசுத்தவான்களைப் போல மரித்து பரலோக ராஜ்யத்தில் பங்குபெற முடியும் என்ற நினைப்பில் மிதந்து கொண்டிருக்கிறோம்.

'அபாயம்' 'நாய்கள் ஜாக்கிரதை,' 'மெதுவாகச் செல்லவும்' என்பன போன்ற அபாய எச்சரிப்புகளை யாரும் மீறுவதில்லை. மீறினால் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்பது உடனுக்குடன் தெரிந்து விடும். ஆனால், தேவன் நமது ஆன்மீக வாழ்வு சம்பந்தமான அபாய எச்சரிப்புகளை வேதாகமத்தின் பல பகுதிகளில் ஆவியானவரைக் கொண்டு எழுதிவைத்திருக்கிறார். ஆனால் அதைப்பற்றி யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. காரணம்: அதன் விளைவுகள் உடனடியாக நம் கண்களுக்குத் தெரிவதில்லை. தூரப்பார்வையற்ற இந் நிலைமை அநேக ஆத்துமாக்களை நரகத்துக்கு அழைத்துச் சென்று கொண்டிருக்கிறது. பிர 8:11

கடற்கரையோரத்தில் இதமான மாலை நேரத்தில் மந்தகாசமான தென்றல் மேனியைத் தழுவ ஒரு சிறுமி,மணலில் ஒரு நகரை நிர்மாணித்துக்கொண்டிருந்தாள். திட்டமிட்ட வீடுகள், தெருக்கள், வங்கி, பள்ளி, ஆலயம் என்று பல காரியங்களை ஒரு கட்டுமானப் பொறியாளரைப் போல அமைத்து, நகர எல்லைச் சுவர் கட்டி, அதற்கு வெளியே தோட்டம், தோட்டத்துக்குள்ளே வீடுகள், நகரத்தை இணைக்க நெடுஞ் சாலைகள்-இப்படியாக நேரம் போவதுகூடத் தெரியாமல் தன் நிர்மாணப் பணி விளையாட்டில் மூழ்கி இருந்தாள். மாலை மங்கி, ஆதவன் மறைந்து

இருண்ட மேகங்கள் திரள, குளிர்ந்த காற்று வீசிற்று.' சிறுமியோ இயற்கையின் மாற்றங்கள் எதையும் கவனித்தாள் இல்லை. அவள் தன் நகரமைப்பு விளையாட்டில் மும்முரமாக ஈடுபட்டிருந்தாள். கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டு அலைகள் கடலை மோதின. வேகமாக வந்த ஓர் அலை அச்சிறுமி பெரும் முயற்சியோடு வடிவமைத்த நகரை அடியோடு அழித்துவிட்டு ஓடிவிட்டது. ஒரு நொடியில், தான் ஆசையாகக் கட்டி முடித்த நகரம் அழிந்துபோனதை ஏக்கப் பெருமூச்சுடன் சிறிது நேரம் வெறித்துப் பார்த்து விட்டு துயரத்தோடு வீடு நோக்கி நடை போட்டாள்.

ஆம், நண்பர்களே! வாழ்க்கையின் நிலையாமையை எண்ணிப் பார்ப்பதில் நாம் அந்தச் சிறுமியைவிட விவேகமானவர்கள் என்று சொல்லிவிட முடியாது. வாழ்க்கை புகையைப் போன்றது என்று யாக்கோபும், தாவீதும் (யாக் 4:14, சங் 102:3.) 'ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும், சஞ்சலம் நிறைந்தவனு-மாயிருக்கிறான். அவன் பூவைப்போலப் பூத்து அறுப்புண்டுபோகிறான் நிழலைப்போல நிலைநிற்காமல் ஓடிப்போகிறான் (யோபு 14:1,2) என்று யோபும் இன்னும் பலவிதமாக வாழ்க்கையின் நிலையாமையை வேதாகமமும் வர்ணிக்கிறது ஆயினும் வீட்டு மேல் வீடு கட்டுவதிலும் வங்கிகளில் பணத்தை நிரப்புவதிலும், களஞ்சியங்களில் தானியங்களைச் சேர்ப்பதிலும் ஆழ்ந்துபோய், ஆன்மீக காரியங்களுக்கு நேரம் ஒதுக்க மறந்துபோகிறோம். ஆன்மா முக்கியமா? சரீரம் முக்கியமா? என்று ஒரு கேள்வியை எழுப்பினால் ஆன்மாதான் முக்கியம் என்று ஏறக்குறைய எல்லாருமே சொல்லுவார்கள். ஆனால் செயலில்...?

நம்மை அழிவுக்கு இழுத்துச் செல்லும் இருண்ட மேகங்களாகிய பாவங்கள் உருவாக்கும் புயலைப் பற்றிச் சிறிதும் சிந்திக்காமலேயே வாழ்ந்து வருகிறோம். 'மோசம் போகாதிருங்கள். தேவன் தம்மைப் பரிகாசம் பண்ணவொட்டார். மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்துக்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினாலே அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியி-னாலே நித்திய ஜீவனை அறுப்பான்' கலா 5:7,8.

'உன் வாழ்க்கையின் திட்டமென்ன?' என்று தன்னிடம் ஆலோசனை கேட்கவந்த இளைஞன் ஒருவனிடம் பெரியவர் கேட்டார். கல்லூரி சென்று பட்டம் பெற்று, கைநிறைய சம்பளம் கிடைக்கும் வேலை ஒன்றைத் தேடிக்கொள்வேன் என்று நம்பிக்கையும் தெம்பும் நிறைந்த பதில் வந்தது இளைஞனிடமிருந்து.

அருமையான திட்டம்!...அப்புறம்? திருமணம் செய்துகொண்டு குழந்தைகள் பெற்று உல்லாசமாக வாழ்க்கை நடத்துவேன்—'பேச்சிலே ஒரு பெருமிதம். ஓ! அது இன்னும் ரொம்ப அருமை!......அப்புறம்!

மீண்டும் கேட்டார் பெரியவர். அப்புறம்என்ன? கைநிறையக்கிடைக்கும் ஓய்வூதியத்தின் பெரும் பகுதியை வங்கியில் போட்டு விட்டு மீதமுள்ள பணத்தை எடுத்துக்கொண்டு குடும்பத்தோடு கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரை ஒரு உல்லாசச்சுற்றுலா. அதை முடித்துவிட்டு ஹாயாக ஓய்வெடுப்பேன்.' இது இளைஞனுடைய நீண்ட திட்டத்தின் அறிவிப்பு.

அதன் பின்...?—பெரியவர் கேட்டார்: அதன்பின் நான் நினைக்கிறேன்... ..செத்துப்போவேன் ....இப்பொழுது இளைஞனின் வார்த்தைகள் தடுமாறின. முகத்தில் ஒருவிதக் கவலை தோய்ந்திருந்தது.

முதியவர் அமைதியாக ஆனால் அழுத்தமாகத் தன் கடைசிக் கேள்வியைக் கேட்டார்? ——அதன்பின்?... அவனுக்கு அதற்குப் பதில் தெரியவில்லை. காரணம் அதற்குமேல் அவன் சிந்திக்கவில்லை.

ஆம், சகோதரர்களே! அவன்மட்டுமல்ல; நம்மில் அநேகருடைய சிந்தனை அதற்கு மேல் போவதில்லை. மரித்தபின் என்ன? உலக ஆசாபாசங்களில் சிக்கிச் சீரழிந்து அதில் அமிழ்ந்துகிடக்கும் என் இனிய நண்பர்களே, அன்புச் சகோதரிகளே! இதுபற்றி எப்போதாவது சிந்திப்பதுஉண்டா? உங்கள் உறவினரோ, நண்பரோ மரித்தபின் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்லும்போது ஒரு இரண்டு நிமிடம் அதைப்பற்றிய சிந்தனை வரும். பிறகு பழையபடி ஆட்டமும், பாட்டும், பரவசமும், உல்லாசமும் தான்.

ஒருவேளை உங்கள் போதகர், உங்களை இறைவனடி சேர்ந்து விட்டார் என்று கல்லறைப் பிரகடனம் செய்யலாம். கடவுள் அதை ஏற்றுக்கொள்வாரா?

பாவியாக வாழ்ந்துவிட்டு பரிசுத்தவானாக மரிக்க முடியாது. முடியவே முடியாது ஆகையால் நண்பரே, சகோதரியே எஞ்சியிருக்கிற வாழ்க்கையிலாவது தேவனுக்குப் பயந்து அவருடைய கற்பனைகளை கைக்கொள்ளுங்கள். கர்த்தர் நமக்காக ஆயத்தம் செய்து வைத்திருக்கிற இடத்துக்குப் போவதற்கு அவைகளே நம்மைத் தகுதிப்படுத்தும் இனியாவதுமுயற்சிப்போமா?

"அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போல் இருந்தார். இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷர் எல்லாருக்கும் கட்டளையிடுகிறார். அப் 17:30

மூலம்: எட்ல் பாசல்சன். தமிழில் எஸ். எஸ். ராஜன்

சஞ்சலத்தோடு கூடிய அதிகப் பொருளிலும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடு கூடிய கொஞ்சப் பொருளே உத்தமம்.

சோம்பேறியின் வழி முள்வேலிக்குச் சமானம். நீதிமானுடைய வழியோ ராஜபாதை.

# பழைய ஏற்பாடு

பழைய ஏற்பாடு யூத மக்களின் வரலாறும் மார்க்கமும் அடங்கியதாக இருக்கிறது. கிறிஸ்துவின் வருகைக்காக வழியைச் செம்மை செய்யும் தம்முடைய சிறந்த வேலையின் ஆயத்தத்திற்கென்று தேவன் தெரிந்துகொண்டவர்களே இந்த யூதர்கள். இவர்களுடைய வரலாறு ஆதாம் ஏவாள் படைப்பில் ஆரம்பமாகித் தொடர்ந்து பாபிலோன் சிறையிருப்பினின்று விடுதலையாக்கப்பட்ட கி. மு. ஆறும் நூற்றாண்டின் இறுதிவரை உருவச் சொல்லப்பட்டு இருக்கிறது. பழைய ஏற்பாடு யூத மக்கள் சமுதாயத்தின் உயர்வு தாழ்வைப்பற்றிச் சொல்லுகிறது. தேவன் ஒரு பரிசுத்தமான வேலைக்கென்று யூதர்களைத் தெரிந்துகொண்டதனாலேயே இந்த வரலாறு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது.' பழைய ஏற்பாட்டின் கடைசிப் புத்தகமான மல்கியா கி. மு. 430-ல் எழுதப்பட்டது.

பழைய ஏற்பாடு யூத மக்களின் வரலாற்றை மட்டுமே சொல்லாமல் அவர்களுடைய மார்க்கத்தையும் சொல்லுகிறது. இந்த மார்க்கம் சீனாய் மலையில் தேவனால் மோசேயுக்குக் கொடுக்கப்பட்ட மோசேயின் நியாயப்பிரமாணத்தில் அடங்கி இருக்கிறது. இந்த நியாயப்பிரமாணம், மார்க்க சமூக வாழ்க்கையை ஆண்டு நடத்தக் கூடிய பத்துக் கற்பனைகளும் இன்னும் பல விரிவான கற்பனைகளும் அடங்கியதாக இருக்கிறது.

பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்களிலும் மோசேயின் நியாயப்பிரமாணம் அடங்கியிருக்கிறது. இது மோசேயுக்கு முன்னும் பின்னும் நடந்த வரலாற்று உண்மைகளோடு வெளிப்படுத்தப்பட்டு இருக்கிறது. அடுத்து இருக்கும் பன்னிரெண்டு புத்தகங்களும் நியாயப் பிரமாணம் கொடுக்கப்பட்டதிலிருந்து பாபிலோன் அடிமைத்தனத்தி-னின்று விடுதலையாக்கப்பட்ட காலம் வரைக்குமான யூதர்களின் வரலாற்றை அடக்கமாகக் கொண்டு இருக்கின்றன. அடுத்து இருக்கும் ஐந்து புத்தகங்களும் யூதர்களுடைய மார்க்க சம்பந்தமான செய்யுள் பகுதியாக விளக்குகின்றன. இவற்றுள் நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தவர்களின் விசுவாசம், மனஸ்தாபம் துதி தோத்திரங்கள் ஆகியவை ஆவியின் எழுப்புதலோடு வெளிப்படுத்தப்பட்டு இருக்கின்றன. இறுதியான பதினேழு புத்தகங்களும் யூத தீர்க்கதரிசிகளின் எச்சரிக்கைகளும் தரிசனங்களும் நிறைந்தனவாக உள்ளன. இவ்வாறாக, நமக்குப் பழைய ஏற்பாட்டில் நான்கு தலையாய பிரிவுகள் இருக்கின்றன. நியாயப்பிரமாணம்—ஐந்து புத்தகங்கள்; வரலாறு—பன்னிரெண்டு புத்தகங்கள்; செய்யுள் ஐந்து-புத்தகங்கள்; தீர்க்க தரிசனம்-பதினேழு புத்தகங்கள்.

## மார்க்க வரலாற்றில் அதனுடைய இடம்

மேலே சுருங்கச் சொல்லியிருக்கிற அதனுடைய உள்ளடக்கத்தின் படி, பழைய ஏற்பாடு தன்னைச் சருவ உலகத்தின் இரட்சிப்பிற்கு உரிய ஒருவழி என்று சொல்லவில்லை என்பதை உடனே காண்கிறோம். அது யூதர்களுக்கென்று கொடுக்கப்பட்டதாகவும், யூதர்களைப்பற்றிய தாகவும் இருக்கிறது. யூதரல்லாத மற்ற மக்கள் யூத மக்களோடு தொடர்புகொண்ட இடங்களைத் தவிர,மற்றபடி அவர்களுடைய வரலாறு இதிலே சேர்க்கப்படவில்லை. கிறிஸ்து யூதரிலிருந்து வருகிற தற்காகத் தேவன் அவர்களைத் தெரிந்து கொண்டார். பழைய ஏற்பாட்டில் மோசேயினுடைய நியாயப்பிரமாணம் கிறிஸ்துவின் வருகைக்கு யூதர்களை ஆயத்தப்படுத்துகிற கருவியாக அமைந்திருக்கிறது. வேறு வகையில் சொல்லவேண்டுமானால், யூதர்கள் கிறிஸ்துவின் வருகை மட்டும் உண்மையான மார்க்கத்தை உயிரோடு நடைமுறை-யில் வைத்துக் கொண்டிருக்கிறதற்காக தேவனால் நியமிக்கப்பட்ட பரிசுத்த ஊழியக்காரர் ஆவர். கலாத்தியர் 3:23, 24 வசனங்களைக் கவனமாய்ச் சிந்தியுங்கள். இந்த வேதப்பகுதி, கிறிஸ்துவின் மூலம் ஒரு நித்திய வழியை ஏற்படுத்துகிற காலம்வரைக்கும் மோசேயின் நியாயப்பிரமாணம் தற்காலிகமாக நடைமுறையில் இருக்கிறதற்கென்று ஏற்படுத்தப்பட்டது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது; நியாயப்பிரமாணம் ஓர் உபாத்தியாயராக அல்லது அந்தச் சொல்லின் துல்லியமான அருத்தத்தின்படி 'மெய்க் காவலாளியாக' இருந்தது. அக் காலங்களில் வீடுகளில் அடிமைகளாக இருந்தவர்கள், சிறு பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்குப் பத்திரமாய்ப் போய்ச் சேருகிறதற்கு அவர்களைத் தங்களுடன் அழைத்துக் கொண்டு போவார்கள். அவ்வாறு வழித் துணையாகப் போகும் அடிமைகள் 'வழிநடத்திகள்' அல்லது 'பிள்ளைகளை வழி நடத்துபவர்கள்' என்று அழைக்கப்பட்டார்கள். இங்கே பயன் படுத்தப்பட்டு இருக்கிற சொல் இதுதான் நியாயப் பிரமாணமானது, உண்மையான ஆசிரியராகிய கிறிஸ்து இயேசுவினிடம் பத்திரமாக வழி நடத்துகிற மெய்க் காவலாளியாக இருந்தது. கலாத்தியர் 4:3-6ஐயும் பாருங்கள். இந்த வேதப்பகுதி மோசேயின் நியாயப்பிரமாணத்தைப் பெற்றோர்கள் சிறு பிள்ளைக்கு விதிக்கிற கட்டளைக்கு ஒப்பிடுகிறது. கிறிஸ்துவின் சுவிசேஷம் இங்கே பருவம் அடைந்த ஆளின் சுதந்திரத்-திற்கு ஒப்பிடப்பட்டு இருக்கிறது. பிள்ளையின் வழி நடத்துதலுக்காக அவனுக்கு, விதிக்கப்பட்டிருந்த கட்டளைகள் அவன் பருவம் அடைகிற காலம் வரைக்குமானவைகள். பருவம் அடைந்ததும் அந்தக் கட்டளை கள் அவன் மீது அதிகாரம் செலுத்தக் கூடாமல் பயனற்று எடுபட்டுப் போகின்றன. அப்படிப் போலவே பழைய ஏற்பாடு பிள்ளையை ஆண்டு வழி நடத்துகிறதற்காகக் கொடுக்கப்பட்டது; ஆனால் கிறிஸ்துவின் வார்த்தையுடன் நாம் பருவம் அடைகிறோம்.

## எப்பொழுது எடுபட்டுப் போயிற்று

அப்படியானால், எப்பொழுது அந்தப் பழைய பிரமாணம்

எடுபட்டுப் போயிற்று? மறுபடியும் கலாத்தியர் 4:5-இல் இயேசு தாமே நியாயப்பிரமாணத்தின் கீழ்ப்பிறந்தார் என்று சொல்லப்பட்டு இருக்கிறதைக் கவனியுங்கள். கிறிஸ்து வந்த பொழுதும் நியாயப்பிரமாணம் அமுலிலிருந்தது. அவர் தம்முடைய வேலையை முடித்துப் புதிய வழியை ஏற்படுத்தும் வரைக்கும் அது நடைமுறையில் இருந்தது. அவருடைய வேலை எப்பொழுது முடிவுற்றது? அவர் தாமே அதை நமக்குச் சொல்லுகிறார். யோவான் 19:30 வாசியுங்கள். அதோடு கொலோசெயர் 2:14-ஐயும் வாசியுங்கள். இங்கே பவுல் பழைய பிரமாணம் 'சிலுவையின்மேல் ஆணி அடித்து' 'நடுவிலிராதபடிக்கு எடுத்துப்' போடப்பட்டது என்று சொல்லுகிறான். இவ்வாறு பழைய ஏற்பாடு தன்னுடைய வேலையைச் செய்து முடித்தபிறகு செல்லுபடியற்ற பிரமாணமாகத் தள்ளுண்டு போயிற்று எபேசியர் 2:15-யும் பாருங்கள். முதலில் அது கிறிஸ்துவினிடம் வழி நடத்தப்படுகிறதற்காகக் கொடுக்கப்பட்டது. கிறிஸ்து சிலுவையின் மேல் தம்முடைய இரட்சிப்பின் திருப்பணியை நிறைவேற்றினதும் அதனுடைய வேலையும் நிறைவேற்றப்பட்டது. கிறிஸ்து மரணமடைந்த பொழுது அவருடைய வேலை முடிந்தது; அதன்படியே பழைய நியாயப்பிரமாணமும்' சிலுவையின்மேல் ஆணியடிக்கப்பட்டது.' கிறிஸ்துவின் மரணத்திற்குப் பிறகு ஒருவரும் பழைய ஏற்பாட்டிற்கு கீழ்ப்பட்டவர்கள் அல்ல. இன்றைக்கும் பழைய ஏற்பாட்டிற்கு நம்மீது அதிகாரம் உண்டு என்று சொல்லி கிறிஸ்தவர்கள் சனிக்கிழமையைப் பரிசுத்த நாளாகக் கடைபிடிக்க வேண்டுமென்பன போன்ற இன்னும் சில காரியங்களைப் போதிக்கிற சில போதனையாளர்கள் உண்டு. ஆனால் பவுல் எழுதின நிருபங்களான கலாத்தியர், ரோமர் என்பவை முழுக்க முழுக்க கிறிஸ்துவின் கீழ் வாழ்ந்து அவரைத் தம்முடைய ஆத்ம இரட்சகராகக் கொண்டிருக்கிற நாம், இனிமேல் பழைய ஏற்பாட்டின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டவர்கள் அல்ல என்பதைத் தெளிவாகக் காட்டுகிறதற்காகவே எழுதப்பட்டிருக்கின்றன. கலாத்தியர் 5:1 வாசியுங்கள். இது கலாத்தியா நாட்டில் இருந்த கிறிஸ்தவர்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகமாகிய மோசேயின் நியாயப்பிரமாணத்திற்குத் திரும்பிப் போகாமல் இருக்கிறதற்காக விடப்பட்ட ஒரு வேண்டுகோளும் கிறிஸ்துவுக்குள் இருக்கிற தங்களுடைய சுதந்திரத்தில் உறுதியாய் நிலைத்து இருக்கும்படிக்கு கொடுக்கப்பட்ட ஓர் எச்சரிப்பு உபதேசமாகவும் இருக்கிறது.

## இன்றைக்கு நமக்கு அதனுடைய உபயோகம்

பழைய ஏற்பாடு கிறிஸ்துவின் மரணத்திற்குப் பிறகு செயலற்றுப் போய்விட்டதாகையால் நாம் இன்னும் ஏன் அதனைப் படிக்கிறோம், கற்கிறோம்? நாம் ஏற்கனவே இந்த ஒரு காரியத்தைக் குறித்துப் பார்த்து இருக்கிறோம்; அதாவது, பழைய ஏற்பாடு தேவ ஆவியினால் ஏவப்பட்டு அருளப்பட்ட மார்க்க வரலாற்றையும் முன்னுரையையும்

உடையதாக இருக்கிறது: இதை நாம் வேறு எவ்விடத்திலேயும் காண முடியாது. அது புதிய ஏற்பாட்டை நன்கு புரிந்து கொள்ளுகிற தற்கு நமக்கு உதவியாக இருக்கிறது. அது, தேவன் கிறிஸ்துவின் வருகைக்காக ஆதிமுதல் செய்து வந்த ஆயத்தக் கிரியைகளைக் கொண்டு நமக்குத் தேவனுடைய நித்திய நோக்கத்தை வெளிப்படுத்துகிறது. அகஸ்டியன், 'பழைய ஏற்பாடு புதியதின் ஒளிப்பிடம் என்றும் புதியது பழையதின் வெளிப்பாடு' என்றும் சொல்லியிருக்கிறார்.

பண்டை நாட்களில் தேவன் மக்களை நடத்திவந்த வழி வகைகளை நாம் அறியலாம்; அவை அனைத்தும் நமக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றன. 1 கொரிந்தியர் 10:11-ஐக் கவனியுங்கள். நாம், ஒரு வேறுபட்ட ஏற்பாட்டின் கீழ் வாழ்ந்த போதிலும் முற்காலங்களில் வாழ்ந்த தேவனுடைய சிறந்த பக்தர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதை வாசிக்கிறதினால் நாம் ஆவியின் எழுப்புதலைப் பெறலாம். தாவீது தேவனிடத்தில் விசுவாசமும் உறுதியும் நிறைந்த ஒரு பக்தர், அவருடைய விசுவாசம் நம்மிலுள்ள விசுவாசத்தைப் ஊக்குவிக்கலாம். ஆனால், தாவீதைப் போல நாமும் மிருக பலிகளைச் செலுத்தவேண்டும் என்று சொல்லப்படவில்லை; என்றாலும் நாம் அதே தேவனில் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கிறோம்.

இப்படி இருக்க, சுருக்கமாக: பழைய ஏற்பாடு ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகவும், அதற்கேற்றாற்போல் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கும், மக்களுக்கும் என்று கொடுக்கப்பட்டது; காலம் நிறைவேறின போது அது கட்டளையாக இல்லாமல் அதிகாரமற்றுப் போயிற்று, எவ்வாறெனினும், நாம் அதை வாசிக்கிறதிலும் கற்கிறதிலும் வரலாற்றை அறிந்து கொள்கிறோம். ஆவியின் எழுப்புதலைப் பெறுகிறோம், நீதியாய் வாழ்வதற்கு எடுத்துக்காட்டான புத்தி போதனைகளைப் பெற்று ஆவியில் ஆனந்தம் அடைகிறோம்.

---

புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள்; புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப் போடுகிறாள்.

மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு. அதன் முடிவோ மரண வழிகள்.

தீயோர் நல்லோருக்கு முன்பாகவும், துன்மார்க்கர் நீதிமான்களுடைய வாசற்படிகளிலும் குனிவதுண்டு.

தரித்திரன் தனக்கடுத்தவனாலும் பகைக்கப்படுகிறான். ஐசுவரியவானுக்கோ அநேக சிநேகிதருண்டு.

சொஸ்தமனம் உடலுக்கு ஜீவன்; பொறாமையோ எலும்புருக்கி.

நீதி ஜனத்தை உயர்த்தும். பாவமோ எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி.

---

# இஸ்ரவேலை ஆண்ட அரசர்கள்

(அ) பிளவுபடாத இஸ்ரவேலின் மேல் ஆட்சி செலுத்தியவர்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1. | சவுல் | (40 ஆண்டுகள்) | 1 சாமு 11:15-31-13 |
| 2. | தாவீது | (40 ஆண்டுகள்) | 2 சாமு 2:4-1 ராஜா 2:11 |
| 3. | சாலமோன் | (40 ஆண்டுகள்) | 1 ராஜா 1:39-11:43 |

(ஆ) பிளவுபட்டபின்:

இஸ்ரவேல் (வடராஜ்யம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | யெரோபெயாம் | (2 ஆண்டுகள்) | 1 ராஜா 12:20-14:20 |
| 2. | நாதாப் | (2 ஆண்டுகள்) | 1 ராஜா 15:25-27, 31 |
| 3. | பாஷா | (24) ஆண்டுகள்) | 1 ராஜா 15:28-34-16:1-7 |
| 4. | ஏலா | (2 ஆண்டுகள்) | 1 ராஜா 16:8-14 |
| 5. | சிம்ரி | (ஏழு நாட்கள்) | 1 ராஜா 16:15 |
| 6. | ஓம்ரி | (12 ஆண்டுகள்) | 1 ராஜா 16:23-28 |
| 7. | ஆகாப் | (22 ஆண்டுகளி) | 1 ராஜா 16:29-22:40 |
| 8. | அகாசியா | (2 ஆண்டுகள்) | 1 ராஜா 22:51-53 |
| 9. | யோராம் | (12 ஆண்டுகள்) | 2 ராஜா 3:1-9:26 |
| 10. | எகூ | (28 ஆண்டுகள்) | 2 ராஜா 9:2-10:36 |
| 11. | யோவாகாஸ் | (16 ஆண்டுகள்) | 2 ராஜா 13:10-25 |
| 12. | யெரோபெயாம் II | (41 ஆண்டுகள்) | 2 ராஜா 14:23-29 |
| 13, | சகரியா | (6 மாதங்கள்) | 2 ராஜா 15:8-12 |
| 14. | சல்லூம் | (1 மாதம்) | 2 ராஜா 15:13-15 |
| 15. | மெனாகேம் | (10 ஆண்டுகள்) | 2 ராஜா 15:16-22 |
| 16. | பெக்காகியா | (2 ஆண்டுகள்) | 2 ராஜா 15:23-29 |
| 17. | பெக்கா | (20 ஆண்டுகள்) | 2 ராஜா 15:27-31 |

தென் இராஜ்ஜியமாகிய

# யூதாவை ஆண்ட அரசர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | ரெகொபெயாம் | (17 ஆண்டுகள்) | 1 ராஜா 12:21-24 |
| 2. | அபியா | (3 ஆண்டுகள்) | 1 ராஜா 15:1-8 |
| 3. | ஆசா | (41 ஆண்டுகள்) | 1 ராஜா 15:9-24 |
| 4. | யோசபாத் | (25 ஆண்டுகள்) | 1 ராஜா 22:41-50 |
| 5. | யோராம் | (8 அண்டுகள்) | 2 ராஜா 8:16-24 |
| 6. | அகாசியா | (1 ஆண்டு) | 2 ராஜா 8:25-29 |
| 7. | அத்தாலியா(ராணி) | (6 ஆண்டுகள்) | 2 ராஜா 11:1-1-3 |
| 8. | யோவாஸ் | (40 ஆண்டுகள்) | 2 ராஜா 12:1,21 |
| 9. | அமசியா | (29 ஆண்டுகள்) | 2 ராஜா 14:1-20 |
| 10. | அசரியா (உசியா) | (52 ஆண்டுகள்) | 2ராஜா 15:1,1,2 |
| 11. | யோதாம் | (16 ஆண்டுகள்) | 2 ராஜா 15:32-38 |
| 12. | ஆகாஸ் | (16 ஆண்டுகள்) | 2 ராஜா 16:1-20 |
| 13. | எசேக்கியா | (29 ஆண்டுகள்) | 2 ராஜா 18:1-20:21 |
| 14. | மனாசே | (55 ஆண்டுகள்) | 2 ராஜா 21:1-18 |
| 15. | ஆமோன் | (2 ஆண்டுகள்) | 2 ராஜா 21:19-26 |
| 16. | யோசியா | (31 ஆண்டுகள்) | 2 ராஜா 22:1-23:30 |
| 17. | யோவாகாஸ் (சல்லூம்) | (3 மாதங்கள்) | 2ராஜா 23:31-33 |
| 18. | யோயாக்கீம் | (11 ஆண்டுகள்) | 2 ராஜா 23:34-24:9 |
| 19. | யோயாக்கீன் | (3 மாதம்) | 2 ராஜா 24:8-16 |
| 20. | சிதேக்கியா | (11 ஆண்டுகள்) | 2 ராஜா 24:1-725:7 |

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரலோகத்தின் திறவுகோல் நமக்கு வேத வாக்கியங்கள் மூலமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதின் உபதேச அறிவை அடைவதின் மூலமாக நாம் இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டும், தேவனுடைய இராஜ்ஜியமாகிய சபையில் எப்படிப் பிரவேசிக்கக்கூடும் என்று விளங்கிக் கொள்ளமுடியும் இதற்கு நாம் வேதாகமத்தை தியானத்தோடும் ஜெபத்தோடும் படிக்கவேண்டும். சத்தியத்தைக் கலப்படம் இல்லாமல் அறிவிக்கிறவர்களிடத்தில் கேட்டுக் கற்றுக்கொள்ளவேண்டும். இப்படிப் படிப்பதோடும் கேட்பதோடும் நிறுத்திக்கொள்ளாமல் அதற்குக் கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட்டு அவருடைய சபையிலே அங்கமாகிவிட வேண்டும்.

இவைகளையெல்லாம் செய்யாமல் கர்த்தருடைய வசனத்தைத் தெளிவாய்ப் புரியாதவர்களாக இருந்தால் கள்ள போதகர்கள் உள் நுழைந்து விடுவார்கள். அல்லது நமது இருதயம் கடினப்பட்டு நாம் உள் நுழைய முடியாதபடியும் இரட்சிக்கப்பட முடியாதபடியும் தடைகள் ஏற்பட்டு விடும்.

கர்த்தர் தம்முடைய இராஜ்ஜியத்தை பிதாவிடம் ஒப்படைக்க சீக்கிரம் வருகிறார் (1கொரி 15:24) அதற்குள் நாம் இராஜ்ஜியத்துக்குள் இல்லாமல்போனால் நாம் பின்னர் ஒருபோதும் ஒரு வகையிலும் இரட்சிப்படைய வழியே இல்லை.

கர்த்தருடைய சித்தத்தை அறிந்து அதற்குக் கீழ்ப்படிவதன் மூலம் அவருடைய இராஜ்ஜியத்துக்குள் பிரவேசித்து அவரைத் தொழுது மெய்க் கிறிஸ்தவனாக வாழ்ந்து மற்றவர்களுக்கும் சத்தியத்தை அறிவித்து அவர்களையும் இராஜ்ஜியத்தின் பிள்ளைகளாக மாற்றுவதற்குத் தேவன் நம் கையில் அளித்துள்ள வசனம் என்னும் பரலோகத்தின் திறவுகோலைப் பயன்படுத்துவோம். அப்படிச் செய்யாமலிருந்தால் அது தேவனுக்கு விரோதமான பாவம்.

உங்களுக்கு தேவ சித்தம் என்றால் என்ன என்று தெரியுமா? அதற்குக் கீழ்ப்படிந்திருக்கிறீரா? நீங்கள் தேவனுடைய இராஜ்ஜியமாகிய சபைக்குள் இருக்கிறீரா? நீங்கள் பரலோகத்தின் திறவுகோலை உபயோகித்து அழிவை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிற மக்களைத் தடுத்து நிறுத்தி தேவனுடைய சபையாகிய இராஜ்ஜியத்திற்குள் கொண்டு வந்து மறுமையில் பரிசுத்த நகரமாகிய பரலோகத்தின் பிரஜைகளாக மாறும்படி முயற்சிப்பீரா? நாம் முடிந்த அளவு மக்களைப் பரலோகத்தின் பிரஜைகளாக மாறும்படி தேவனுடைய இராஜ்ஜியமாகிய சபைக்குள் கொண்டுவர ஒத்தாசை புரிவாராக.

J. C. சோட்.

# தெரிந்து கொள்ளுங்கள்

## இஸ்ரவேலரின் வரலாற்றுச் சுருக்கம்

இஸ்ரவேலர் என்னும் இனத்தவர் யெகோவா தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள். இயேசுவின் மூலம் கிறிஸ்தவ மக்கள் அனைவரும் அவருடைய சந்ததியாராக எண்ணப்படுகிறோம். ஆகவே நாம் அவர்களுடைய தோற்றுவாய், பூர்வீகம் ஆகியவை பற்றி தெரிந்திருப்பது அவசியம். யெகோவா தேவனால் தெரிந்து கொள்ளப் பட்ட மக்களாகிய எபிரேயர் அல்லது இஸ்ரவேலர் என்றழைக்கப்படும் இயேசுவின் மூதாதையர்களைப்பற்றி சுருக்கமாகத் தெரிந்து கொள்வது கிறிஸ்தவர்களாகிய நமக்கு வேதாகமத்தை புரிந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும் என்று நம்புகிறோம்.

இஸ்ரவேல் என்னும் பெயர் யாக்கோபுக்கு தேவதூதரின் ஒருவரால் கொடுக்கப்பட்ட மறுபெயர், (ஆதி 32:28, 35:10) இப்பெயராலேயே இவனுடைய சந்ததியாகிய எபிரேயர் என்று அழைக்கப்பட்டார்கள். இவர்களுடைய முன்னோர்கள் நாடோடிகளாக அங்கும் இங்கும் அலைந்து திரிந்து அசீரியாவிலிருந்து சீரியா வழியாக கானான் தேசத்திற்கும், அதற்குத் தெற்கே சீனாய் மலை நாட்டிற்கும் வந்து சேர்ந்தார்கள். ஐபிராத்து நதியைக் கடந்து வந்தமையால் எபிரேயர் என அழைக்கப் பட்டனர். இவர்கள் கானான் தேசத்தில் உண்டான பஞ்சத்தின் காரணமாக எகிப்து தேசத்திற்குச் சென்றனர். சென்றவிடத்தில் காலப் போக்கில் அடிமைகளாக எண்ணப்பட்டு சுமார் 430 ஆண்டுகள் அங்கே வாழ்ந்து வந்தனர். கி.மு. 1292-1225ல் எகிப்தை ஆண்ட ராமசேஸ் ii காலத்தில் இவர்களைக்கொண்டு ராமசேஸ், பித்தோம் ஆகிய பட்டணங்களைக் கட்டியதாக வரலாறு கூறுகிறது, இவர்கள் மோசே என்னும் தலைவரால் கி.மு. 1450 அல்லது கி.மு. 1225—2215-ல் மெனப்தா என்னும் அரசன் காலத்தில் விடுதலையடைந்து பல இன்னல்களுக்கு மத்தியில் தங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்திற்கு வந்து குடியேறினர். இவர்களுடைய வனாந்திரப் பயணம் சுமார் 40 ஆண்டுகள். மோசே, யோசுவா, போன்ற பெரும் தலைவர்கள் இவர்களை வழி நடத்தி வந்து, தேவன் அருளிய நியாயப் பிரமாணங்களைக் கொடுத்து ஏற்கனவே அங்கே வாழ்ந்துவந்த பூர்வீகக் குடிகளைத் துரத்தி விட்டு இவர்களைக் குடியமர்த்தினார்கள். மோசேயும், யோசுவாவும் மரித்துப்போன பிறகு நியாயாதிபதிகள் இவர்களை ஆண்டுவந்தார்கள். அவர்களுடைய ஆட்சியில் இஸ்ரவேலருக்குத் திருப்தியில்லை அடிக்கடி பகைவர்களால் தாக்கப்பட்டார்கள். ஆயுதம் தாங்கி நிரந்தரமாக தங்களைப் பாதுகாக்கவும், யுத்தங்களை தலைமைதாங்கி நடத்தவும் தங்களுக்கு ஒரு அரசன் வேண்டுமென விருப்பி சாமுவேலிடம் முறையிட்டார்கள். முதலில் சம்மதிக்கமறுத்த சாமுவேல், பின்னர் நிர்ப்பந்தம் காரணமாகச்

சம்மதித்து பென்யமீன் கோத்திரம் கீஸின் குமாரன் சவுலைத் தெரிந்து கொண்டு அவனை முதல் அரசனாக அபிஷேகம் செய்தார். ஆரம்பத்தில் கர்த்தருடைய ஆலோசனையின்படி நடந்த அவன் பிற்கால ஜீவியத்தில் கர்த்தரை அசட்டை பண்ணினதினால் அவனை அரசனாயிராதபடி விலக்கிப் போட்டார். 1 சாமுவேல் 15:23.

சவுலின் மரணத்திற்குப் பிறகு கி.மு. 1017-ல் யூதா கோத்திரத்தானாகிய ஈசாயின் குமாரன் தாவீது அரசனாக அபிஷேகம் பண்ணப்பட்டான். இவன் 40 ஆண்டுகள் சிறப்பாக ஆட்சி செய்து நாட்டை ஸ்திரப்படுத்தி, விசாலமாக்கி சத்துருக்களை முறியடித்து எருசலேமைத் தலைநகர் ஆக்கினான், இவன் அரசாட்சி செய்த காலத்தை "இஸ்ரவேலின் பொற்காலம்" என்று கூறலாம். பின்னர் கி.மு. 977-937-ல் இவனுடைய குமாரன் சாலமோன் பட்டத்துக்கு வந்து அவனும் 40ஆண்டு காலம் ஆட்சி செய்து பேரும் புகழும் சம்பாதித்தான், மக்களைக் கசக்கிப் பிழிந்து கஜானாவை நிரப்பி, ஆலயம்கட்டுவதிலும், கலை, சிற்பம் என்று ஆடம்பரச்செலவு செய்து கடைசியில் கர்த்தருக்கு உண்மையுள்ளவனாய் நடக்காமற் போனான், (1. ராஜா 11;4) இவன் காலத்துக்குப்பிறகு இஸ்ரவேல் சாம் ராஜ்யம் இரண்டாக உடைந்து தென்பாகத்துக்கு யூதா என்றும்,வடராஜ்ஜியத்துக்கு இஸ்ரவேல்என்றும் பெயர் வந்தது. தென் ராஜ்யத்தை சாலமோனின் மகன் ரெகெபெயாம் அரசாண்டான். வட ராஜ்யம் யெரபெயாம் என்பவன் வசம் போய்ச் சேர்ந்தது. யூதாவில் உள்ள எருசலேமில்தான் தேவாலயம் இருந்தது இஸ்ரவேல் என்னும் நாட்டை ஆண்ட யெராபெயாம் தந்திரசாலி அடிக்கடி மக்கள் எருசலேமுக்குத் தொழுகைக்குச் சென்றால் இராஜ விசுவாசம் ஏற்பட்டு மக்கள் மறுபடியும் தென்னாட்டவரோடு ஐக்கியமாகி விடுவார்கள் என்று பயந்து பெத்தேல், தாண் என்னும் இடங்களில் பலிபீடங்களைக் கட்டி பொன் கன்றுக் குட்டிகளை வார்ப்பித்து அங்கே தொழுகை நடத்தும்படி ஜனங்களை ஏவினான், யெகோவாவை விட்டு விக்கிரக ஆராதனைக்குச் செல்லாதபடி எலியா,எலிசா, ஆமோஸ், ஓசியா, ஏசாயா போன்ற பல தீர்க்கதரிசிகள் மூலமாய் மக்களையும் அரசனையும் யெகோவாவினிடத்தில் திருப்ப பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் பலன் இல்லை.

தேவன் கோபங்கொண்டு எதிரிகளை ஏவி பல படையெடுப்புகளின் மூலம் கண்டித்துப் பார்த்தார், பலன் இல்லை: இறுதியாக அசீரியா அரசன் சர்கோன் படையெடுத்துவந்து கி மு. 722.ல் வட நாடாகிய இஸ்ரவேலை நிர்மூலமாக்கிப் போட்டான், தென் நாட்டை ஆண்டவர்கள்தாவீதின் வம்சத்தாராக இருந்த படியாலும், அவ்வப்பொழுது சில நல்ல அரசர்கள் ஆண்டதினாலும் இறையடியார்கள் அவ்வப்பொழுது மக்களைநல்வழியில் நடத்தியதாலும் மேலும் சுமார் 150 ஆண்டுகள் நீடித்திருந்தது, கி.மு. 568-ல் பாபிலோனின் அரசனாகிய நேபுகாத்

நேச்சார் எருசலேமின் மீது படையெடுத்து கோட்டை கொத்தளங்களையும் தேவாலயத்தையும் அழித்து பிரபுகள், ஆசாரியர்கள் ஆகியோரைச் சிறைப்பிடித்துக் கொண்டு போய் விட்டான். 2 ராஜா 25:8-21.

கி.மு. 538-ல் பாரசீக மன்னன் கோரேஸ் என்பவன் பாபிலோனை வென்று அங்கே அடிமைகளாக வாழ்ந்த இஸ்ரவேலரை விடுதலையாக்கித் தங்கள் சொந்த நாட்டுக்குப்போய் வாழ விடுதலை வழங்கினான். செருபாபேல் என்பவனுடைய தலைமையில் கி.மு. 520-ல் முதற்கட்டமாக ஒரு கூட்டம் எருசலேமுக்குத் திரும்பி வந்து கி.மு. 616-ல் தேவாலயத்தை மீண்டும் புதுப்பித்தார்கள். (எஸ். 6:5) கி.மு 444—ல் அர்தசஷ்டா அரசனுக்கு பானபாத்திரக்காரனாக இருந்த நெகேமியா எருசலேமின் அவலநிலையைப் பார்த்து விசனப்பட்டு அங்கே கவர்னராக நியமனம் பெற்று பலமான எதிர்ப்பு இருந்தும் அலங்கங்களைக்கட்டி முடித்தான். ஆசாரியனாகிய எஸ்றாவுடன் சேர்ந்துகொண்டு பல சமய சமுதாயச் சீர்திருத்தங்களைச் செய்தான் நெகே 8:9-10:1.

கி. மு. 198-ல் அலெக்ஸாந்தரின் தளபதிகளில் ஒருவனான மூன்றாம் அந்தியோகு என்னும் சீலுக்கிய மன்னன் பலஸ்தீனாவை தன் வசமாக்கிக்கொண்டான். அவனுடைய வாரிசுகளில் ஒருவன் நான்காம் அந்தியோகு எப்பிப்பானஸ் என்பவன் கி.மு. 175-164-ல் ஆட்சிக்கு வந்தான். இவன் யூத மத விஷயங்களிலும் வழிபாட்டிலும் குறுக்கிட்டு செய்தது மட்டும் இல்லாமல் கிரேக்க தெய்வங்களை வணங்கவும் கட்டாயப்படுத்தினான். இதனால் யூதர்கள் மோர்தின் ஊர் மட்டத்தியா என்னும் ஆசாரியன் மற்றும் அவனுடைய மைந்தர்கள் தலைமையில் கலகம் செய்தனர். இதுவே வரலாற்றுப் புகழ் வாய்ந்த மக்கபேயர் கலகம். மட்டத்தியாவின் மூத்த மகனான யூதாஸ் மக்கபேயுவின் தலைமையில் (கி.மு 155-160) யூதர்கள் எப்பிப்பானசின் படைகளை வென்று, எப்பிப்பானஸ் தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தின அதே நாளில் கி.மு. 165-ம் ஆண்டு டிசம்பர் 25-ல் தேவாலயத்தைச் சுத்திகரித்துப் பிரதிஷ்டை செய்தனர். 1 மக் 4:36—59: (தள்ளுபடி ஆகமம்)

யூதாஸ்க்குப் பின் யோனத்தான். (கி.மு. 159-142) சீமோன் (கி.மு. 142-134) ஆகிய மக்கபேய சகோதரர்கள் தலைமை தாங்கி யூதர்களை நடத்திச்சென்றனர். சீமோன் காலத்தில் மூன்றாம் ஒனியா என்னும் பிரதான ஆசாரியனுக்குப் பின் முறையாக நியமனம் பெற்ற பிரதான ஆசாரியர்கள் யூதர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, ஹாஸ்மோனியர் என்னும் மக்கபேயர் குடும்பத்திலேயே ஒருவனை ஏற்படுத்த விரும்பினர். அப்படியே சீமோன், முறையான பிரதான ஆசாரியத்துவமும் இராஜரீகமும் இணைந்ததோர் புதிய ஆளுகைக்குத் தலைமை ஏற்றான். இது ''ஹாஸ்மோனியர் ஆளுகை (Hasmonean Kingdom) எனப்பட்டது. கி.மு. 66-63-ல் உரோம் அரசனான பாம்பே எருசலேமை அழித்து இரண்டாம் அரிஸ்தோபுலஸ் என்பவனோடு சேர்ந்து இந்த ஹாஸ்மோனியர் ஆளுகைக்கு முடிவு கட்டினான்.

இப்படியாக கி. மு. 63-ல் யூதேயாவை உரோமை மாகாண மாகிய சீரியாவின் ஒரு பகுதியாக்கி (கி.மு. 63 முதல் கி.பி. 44 வரை) ஏரோது என்னும் வம்சம் உரோமைப் பேரரசுக்குப் பிரதிநிதியாக ஆளுகை செய்து வந்தது. இந்த வம்சத்தில் கி.மு, 37-4வரை ஆண்ட பெரிய ஏரோது முக்கியமானவன். இந்தக்காலத்தில் இயேசு பிறந்து வாழ்ந்தார். அப்போஸ்தலர்கள் ஆதிக் கிறிஸ்தவ சபைகளை ஸ்தாபித்தார்கள். விடுதலை வேட்கை காரணமாக யூதர்கள் அடிக்கடி ரோம அரசுக்கு தொல்லைகள் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இறுதியாக ரோம அரசு தன் முழுபலத்தையும் பிரயோகித்து. கி பி. 70-ல் யூதர்களை சங்கரித்து, எருசலேமைத் தரைமட்டமாக்கி, தேவாலயத்தை இடித்துத் தகர்ந்தெறிந்தார்கள். அதற்குப் பிறகும் யூதர்கள் குட்டிக் கலவரங்கள் செய்தார்கள், ஆனால் எடுபடவில்லை, “ எருசலேம் பட்டணமும், அதின் தேவாலயமும் அழிந்ததோடு எபிரேய மக்களின் பூர்வீக கால வரலாறும் முடிவுற்றது என்றால் மிகையாகாது.

---

## கிறிஸ்துவின் சபையாகிய இராஜ்ஜியத்தில் இருக்கும் சில ஆசீர்வாதங்கள்

அ) ஆக்கினைத் தீர்ப்பு இல்லை (ரோமர் 8:1-2) (1 யோவான் 1:7)

ஆ) பாவமன்னிப்பு - கொலோ 1:13,14

இ) பிதாவோடும், கிறிஸ்துவோடும், ஏனைய விசுவாசிகளோடும் ஆவிக்குரிய ஐக்யம் 1 கொரி 12:13; எபே. 5:23; 1 யோவான் 1:3.

ஈ) புதிய ஜீவன் (2கொரி 5:17)

உ) எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள். (எபே. 1:3; 2; பேது 1:3)

ஊ) பரிசுத்த ஆவியின் வரம் (கலா 5:25; 1 கொரி 3:16, 6:19 20: எபே 11;13, 14)

எ) உயிர்த்தெழுதலுக்கான உறுதிமொழி 1 தெச 4:16-18; ரோமர் 8:4.

ஏ). பரலோகம் செல்வோம் என்ற நிச்சயம் 1யோவான் 74:1-3, ரோமர் 6:22; 1யோவான் 3:1-3.

---

# இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்கள்

எண் : 1:20-43

| | |
|---|---|
| 1. ரூபன் | 7. எப்பிராயீம் |
| 2. சிமியோன் | 8. மனாசே |
| 3. காத் | 9. பென்யமீன் |
| 4. யூதா | 10. தாண் |
| 5. இசக்கார் | 11. ஆசேர் |
| 6. செபுலோன் | 12. நப்தலி |

# வேதாகமம் தேவனுடைய வார்த்தை

வேதாகமம் தேவனுடைய வார்த்தை யென்கிற கிறிஸ்தவனுடைய விசுவாசம் பலமான ஆதாரமுடையது. இந்த விசுவாசம் ஒரு குருட்டு நம்பிக்கையல்ல. வைத்தியர் லூக்கா எழுதுகிறபடி "தேவன் தம்மைக் குறித்து சாட்சி விளங்கப் பண்ணாதிருந்ததில்லை." (அப் 14:17)

இந்த விசுவாசத்துக்கு ஆதரவாக வேதாகமத்திலிருந்தும் வேதாகமத்துக்கு வெளியேயும் சில தேர்ந்தெடுக்கப்பட்ட சாட்சியங்கள் உண்டு. வேதாகமம், தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டதாக பவுல் கூறுகிறார் (2 தீமோ 3:16) தேவ ஆவியினால் ஏவப்படுதல் என்பதின் நேரடியான பொருள். தேவன் ஊதினார் (ஆதி 2:7) என்று கொள்ளலாம். அதாவது தேவ சித்தத்தை எழுத்தாளர்கள் பெற்றுக் கொண்டு எழுதும்போது அவர்களுக்கு தேவ ஆவி துணை நின்றார்.

**மனித் ஆற்றலுக்கு மிஞ்சிய ஆச்சரியப் படத்தக்க ஒற்றுமை**

வேதாகமத்தில் காணப்படுகிற ஆச்சரியமான ஒற்றுமை, வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதை ஆழமாக நிரூபிக்கிறது. வேதாகமம், மூன்று மொழிகளில், மூன்று கண்டங்களையும், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நாற்பது பலதரப்பட்ட மனிதர்களால் எழுதப்பட்டது. முதல் நூல் எழுதப்பட்ட காலத்திலிருந்து கடைசி நூல் எழுதப்பட்ட காலம் வரைக்கும் சுமார் 1500 ஆண்டு இடைவெளி இருக்கிறது. வித்தியாசப்பட்ட சூழ்நிலை, பலதரப்பட்ட எழுத்தாளர்கள் 16 நூற்றாண்டு இடைவெளி என்று எத்தனையோ பிரச்சனை இருந்தாலும் வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள இடம். நோக்கம், கூறப்படும் செய்தி, விளக்கம், கொள்கை ஆகியவைகளுக்கு இடையே வியக்கத்தக்க ஒற்றுமை நிலவுகிறது. நிச்சயமாக இவைகள் மனித முயற்சிக்கு அப்பாற்பட்டவை என்பதை எவரும் மறுக்க இயலாது.

ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரை உள்ள 66 நூல்களிலும் கிறிஸ்துவே மையப் பொருளாக இருக்கிறார். அவர் வருகிறார் என்று பழைய ஏற்பாடும் அவர் வந்துவிட்டார், மீண்டும் வருவார் என்று புதிய ஏற்பாடும் கூறுகின்றன. இந்த ஆச்சரியமான உண்மை தற்செயலாகவோ அல்லது சிலரின் விபரீதமான கற்பனை என்று ஒதுக்கித் தள்ளவோ முடியாத அளவுக்கு இணக்கமாக அமைந்துள்ளன. இது எப்படி என்று நாம் திகைக்க வேண்டியதில்லை. இது தேவ ஆவியானவரின் ஏவுதல் என்பதே மிகப் பொருத்தம். (2 தீமோ 3:16)

**மனித ஞானத்துக்கு எட்டாத அளவுக்கு வருங் காலத்தைப் பற்றிய முன் அறிவு**

வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதற்கு, அவைகளில் சொல்லப்பட்டுள்ள தீர்க்க தரிசனங்களும், அவற்றின் துல்லியமான நிறைவேறலும் மற்றுமொரு நம்பகமான சாட்சி. வேதாகமத்தில்.

தீர்க்க தரிசனம் என்ற சொல், தேவனுக்காக தேவன் சார்பாக என்ற பொருளில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. "தெய்வீக வழி நடத்தலின் செல்வாக்கின் கீழ் வருங்கால நிகழ்ச்சிகளை முன் அறிவித்தல்" என்ற பொருளிலும் கூட பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

வேதாகமத்தில் கிறிஸ்துவைப் பற்றிய தீர்க்க தரிசனங்கள் 300க்கும் அதிகமாக இருக்கின்றன. அவற்றில் சில முக்கியமான தீர்க்க தரிசனங்களையும், அவைகள் எப்பொழுது சொல்லப்பட்டன. அவைகள் எப்போது நிறைவேறின என்று பார்ப்போம்.

1. மீகா 5:2ல் பெத்லேகேமில் ஒரு இரட்சகர் பிறப்பார் என்று கி. மு. 758-700-ல் தீர்க்க தரிசனமாக உரைக்கப்பட்டது. இது கி. பி. 1-ல் நிறைவேறியதை மத்தேயு 2.ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம்.

2. ஏசாயா 7:14ல், இயேசுவின் தாயார் ஒரு கன்னியாக இருப்பாள் என்று கி, மு. 810-700ல் தீர்க்க தரிசனமாக உரைக்கப்பட்டது. இது கி. பி. 1-ல் நிறைவேறியதை மத் 1-18ல் பார்க்கிறோம்.

3. சங் 22:18ல் இரட்சகருடைய உடைகளைப் பங்கிட்டுக் கொள்வார்கள் என்று கி. மு. 1005-1000ல் தீர்க்க தரிசனமாக உரைக்கப் பட்டது. இது கி. பி. 33 ல் நிறைவேறியதாக யோவான் 19:23-24ல் எழுதப்பட்டிருக்கிறது.

4. ஏசாய 2:3ல், இரட்சகருடைய இராஜ்ஜியம் எருசலேமிலிருந்து மற்ற இடங்களுக்குப் பரவும் என்று கி. மு. 810-700 வாக்கில் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டது இது கி பி 33—ல் நிறைவேறியதாக அப். 2-10 அதிகாரங்களில் எழுதப் பட்டிருக்கிறது.

5. மத் 24:1ல் எருசலேம் அழிக்கப்படும் என்று கி. பி. 33—ல் உரைக்கப்பட்டது. இது கி. பி. 70ல் நிறைவேறியது.

6. 1 தீமோ 4:1-3ல் விசுவாசத்திலிருந்து சிலர் வழுவிப் போவார்கள் என்று கி. பி. 63ல் உரைக்கப்பட்டது. வெள்ளிக்கிழமைகளில் நோன்பும் கத்தோலிக்க குருக்களின் பிரம்மச்சாரியமும் முறையே கி. பி. 998லும், 1079லும் நடந்தேறியது.

வருங்காலத்தைப் பற்றி தேவன் ஒருவரைத் தவிர மற்றவர்கள் சொல்ல முடியாது. அப்படியிருக்க இந்த தீர்க்க தரிசனங்கள் பிரத்தியட்சமாக நிறைவேறியது என்றால் தேவன் தாமே அவர்களை தேவ ஆவியினால் ஏவியிருக்கக் கூடும் என்பது தெளிவு.

## மனித அறிவுககு அப்பாற்பட்ட விஞ்ஞான முன்னறிவு.

விஞ்ஞான உலகத்துக்குப் பல நூற்றாண்டுகளாக மறைக்கப்பட்டிருந்த பல உண்மைகள் வேதாகமத்தில் நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே இடம் பெற்றுள்ளன.

(அ) இரத்தத்தில் உயிர் இருக்கிறது என்று மோசே கி. மு. 1500-1400ல் எழுதியிருக்கிறார். (லேவி 17:14) ஆனால் இந்த நூற்றாண்டில் தான் அதை மருத்துவ உலகம் தெரிந்து கொண்டது.

(ஆ) உலகம் உருண்டையானது என்று கி. மு. 810–700 வாக்கில் ஏசாயா தீர்க்கதரிசி எழுதினார். ஆனால் சுமார் 500 ஆண்டுகளுக்கு முந்தித் தான் உலகம் அதை ஏற்றுக் கொண்டது.

(இ) பூமி அந்தரங்கத்தில் தொங்குகிறது என்று கி. மு. 1500ல் யோபு எழுதினார். ஆனால் மிகச் சமீப காலத்தில் தான் இதை புவியல் நிபுணர்கள் கண்டு பிடித்தனர். இந்த விஞ்ஞான உண்மைகளை கற்காலத்தில் வாழ்ந்த வேதாகம எழுத்தாளர்களுக்கு எப்படித் தெரிந்தது? தேவன் தாமே அதை வெளிப்படுத்தினார் என்பதைத் தவிர வேறு என்ன விளக்கம் தரமுடியும்?

---

**படைத்த கடவுளைத் தான் அசட்டை செய்கிறீர்கள்;**
**நீங்கள் தலைவனாக ஏற்றுக் கொண்ட**
**சான்றோர்களுக்காவது கீழ்ப்படிய வேண்டாமா?**

லூத்தர்: "என் பெயரை அப்படியே விட்டு விட வேண்டும் என்று நான் மன்றாடுகிறேன். உங்களை லூத்தரன்கள் (Lutherans) என்று அழைத்துக்கொள்ளாதீர்கள்: ஆனால் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்ளுங்கள், லூத்தர் யார்? என் போதனை என்னுடையதன்று. நான் யாருக்காகவும் சிலுவையில் அறையப் படவில்லை, பரிசுத்த பவுல் (1 கொரி 1:13) யாரும் தங்களைப் பவுலைச்சார்ந்தவர்கள் என்றோ, பேதுருவைச் சார்ந்தவர்கள் என்றோ அழைத்துக்கொள்ளக்கூடாது என்றும். கிறிஸ்துவைச் சார்ந்தவர்கள் என்று அழைத்துக்கொள்ளவேண்டும் என்றும் கூறினார். தூளும் சாம்பலும் குப்பையுமாகிய என் பெயரைக் கிறிஸ்துவின் பிள்ளைகளுக்கு வழங்குதல் என்ன பொருத்தமாகும்? என் அன்பார்ந்த நண்பர்களே, குழுப்பெயர்கள், அவற்றின் அடையாள வேறுபாடுகள் இவற்றுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் பண்பிலிருந்து விடுபடுங்கள்; அவைகளை உங்களை விட்டு அப்புறப் படுத்துங்கள். நாம் எல்லோரும் நம்மைக் கிறிஸ்தவர்கள் என்று மட்டுமே அழைத்துக்கொள்வோமாக, கிறிஸ்துவினிடத்திலிருந்து தானே நமது உபதேசம் எல்லாம் வந்தது."

—The Life of Luther by Stork, Page 289.

# பிசாசு என்பவன் யார்?

அ) பிசாசு என்பவன் வானத்திலிருந்து தள்ளப்பட்டவன் (லூக் 10:18; 2 பேது 2:4)

ஆ) பிசாசு சர்ப்பத்தின் ரூபம் எடுத்து மனிதனின் வீழ்ச்சியை உண்டாக்கினான் (ஆதி 3:1)

இ) அவன் சாத்தான் என்றும் (லூக் 10:18) பேலியாள் என்றும் (2 கொரி 6:15) அழைக்கப்படுகிறான்.

ஈ) பிசாசு பொய்யுக்குப் பிதாவாக இருக்கிறான் (யோவான் 8:44; 1 இராஜா 22;22)

உ) பிசாசு ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வான் (2 கொரி 11:14)

ஊ) பிசாசு பொய்யான அற்புதங்களைச் செய்வான் (2 தெச 2:9)

எ) கிறிஸ்து இயேசு பிசாசை புறமுதுகு காட்டி ஓடச்செய்தார். (மத் 4:11)

1) கிறிஸ்து பிசாசின் கிரியைகளை அழித்துப் போட்டார் (1 யோவான் 3:8)

2) கிறிஸ்து தன் மரணத்தின் மூலமாக பிசாசை வெற்றி கொண்டார், (கொலோ 2:15; எபி 2:14)

ஏ) பிசாசு சுவிசேஷம் பரவுவதை தடை செய்கிறான். (மத் 13:19; 2 கொரி 4,4; 1 தெச 2:18)

ஐ) பிசாசின் குணாதிசயங்கள்

1) அவன் மேட்டிமையுள்ளவன் (தீமோ 3:6)
2) அவன் அதிகாரப்பிரபு (எபே 2:2)
3) அவன் ஒரு பொல்லாங்கன் (1யோவான் 2:13)
4) அவன் தந்திரமுள்ளவன் (ஆதி 3:1; 2கொரி 11:3)
5) அவன் வஞ்சனையுள்ளவன் (2கொரி 11:14)
6) அவன் மூர்க்கமும் கொடுமையுமுள்ளவன் (லூக் 8:29: 9;39,42; 1பேது 5:8)

ஒ) கடைசி நியாயத்தீர்ப்பில் அக்கினிக் குள்ளாகத் தீர்க்கப் படுவான் (வெளி 20:10; யூதா 6).

# பாவம் என்றால் என்ன?

(அ) நியாயப் பிரமாணத்தை மீறுகிறதே பாவம். (1 யோவான் 3;4) பாவம் செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான். தேவன், கீழ்ப்படியும்படி, சில நியாயப்பிரமாணங்களை கொடுத்திருக்கிறார். நாம் அவைகளுக்குக் கீழ்ப்படியாமல் போகும்போது, நியாயப்பிரமாணத்தை மீறுகிறோம். ஆகையால் நாம் பாவம் செய்கிறோம்,

(ஆ) அநீதி எல்லாம் பாவம் 1 யோவான் 5 : 17 - ல் ''அநீதி எல்லாம் பாவம்தான், என்றாலும் மரணத்துக்கு ஏதுவல்லாத பாவமுமுண்டு'' ''நீதியோடிருத்தல்'' என்றால் ''நீதியை செய்தல்'' என்று பொருள். நாம் நீதியைச் செய்யவில்லை என்றால் நாம் அநீதியை செய்கிறவர்களாவோம். யோவான் கூறுகிறார், அநீதி எல்லாம் பாவம் தான் என்று.

**(இ) நாம் நன்மை செய்ய அறிந்திருந்தும் அதைச் செய்யவில்லை என்றால் நாம் பாவம் செய்தவர்களாவோம்'' (யாக்கோபு 4:17)**

குறைந்த பட்சம் 2 வகையான பாவங்கள் உண்டு. நேரடியாக செய்யும் பாவங்கள், செய்யவேண்டியவைகளை செய்ய தவறியதால் வரும் பாவங்கள். நேரடியாக செய்யும் பாவங்கள் என்பது செய்ய தகாத காரியங்களைச் செய்வது, செய்யத்தவறிப் பாவங்கள் என்பது, செய்ய வேண்டியவைகளை செய்யாமல் விட்டு விடுவது. நாம் செய்ய வேண்டிய நன்மையான காரியங்களை அறிந்திருந்தும், செய்யக் கூடிய நிலையிலிருந்தும். அவற்றை செய்யவில்லை என்றால் அப்போது நாம் பாவம் செய்கிறோம்.

ஈ) விசுவாசத்தினாலே வராத யாவும் பாவம்—ரோமாபுரியிலுள்ள சபைக்கு பவுல் எழுதும் பொழுது இப்படி கூறுகிறார்: ''விசுவாசத்தினால் வராத யாவும் பாவமே'' ரோமர் 14.23 இங்கு பவுல் போதிக்கிறார், நாம் என்ன செய்கிறோமோ, அது நீதியான காரியம் என்று தெரிந்த பிறகே செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அவற்றை செய்தால் பாவம் செய்தவர்களாவோம். அப்படியானால் மனச்சாட்சியே நம்முடைய பாதுகாப்பான வழிகாட்டி என்று அர்த்தமல்ல, நாம் என்ன செய்தாலும், தேவனை பிரியப்படுத்த, விசுவாசத்தினால் செய்ய வேண்டும், விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்,

உ) ஒரு மனிதன் தன் இருதயத்திலே பாவம் செய்யக்கூடும். (மத்5:28)

பாவம் எப்பொழுதுமே வெளிப்படையாக செய்யக்கூடிய திருட்டு அல்லது பொய்யாகத்தான் இருக்க வேண்டும் என்பதல்ல. உங்கள் மனதில் ஏற்படக் கூடிய நினைவாக கூட இருக்கலாம்.

ஊ) பாவத்தின் தண்டனை மரணம். (ரோமர். 6:23)

## பரிசுத்த ஆசாரியக் கூட்டம்.

'நீங்களோ உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாகவும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும் அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்' என்று பேதுரு கூறுகிறார். I பேதுரு 2:9.

இந்தியாவில் ஆசாரியர்கள் (பூசாரிகள்) அதிகம். அவர்களே கடவுளிடத்தில் மக்களை இணைக்கும் ஏஜண்டுகளாகக் கருதப்படுகிறார்கள். சாதாரண மக்கள் இந்த ஆசாரியர்களை அணுகுகிறார்கள். ஆசாரியர்கள் கடவுளை அணுகுகிறார்கள். ஆசாரியர்களுக்கு ஏகப்பட்ட மதிப்பு! மக்கள் மேல் அவர்களுக்கு அதிகாரமுண்டு. வியாபாரத்திற்கு ஆலோசனை கொடுக்கிறார்கள். திருமணத்திற்கு சுப நேரங்களை கணிக்கிறார்கள். இன்னும் வாழ்க்கையில் முக்கியமான இடத்தைப் பிடித்திருக்கிறார்கள், சாதாரண மக்கள் அவர்களை கௌரவித்து கனப்படுத்துகிறார்கள்.

வேதம், கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரையும் ஆசாரியர்கள் என்றழைக்கிறது. 'பரிசுத்த ஆசாரியக் கூட்டம்' என்று பேதுரு அழைக்கிறார் 1 பேதுரு 2:5. ஏனெனில் நாம் ஒவ்வொருவரும் தேவனை நேரடியாகக் கிட்டிச் சேரும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். நாம் நேரடியாக ஜெபிக்கிறோம். காணிக்கைகளைச் செலுத்துகிறோம். நாம் கர்த்தருக்கு சிநேகிதர்களாய் இருக்கிபடிபடியால் அவர் நமக்கு செவி கொடுக்கிறார்.

எந்த ஒரு கிறிஸ்தவனும் தன் உடன் விசுவாசியின் பழைய வாழ்க்கையைக் குறித்தோ, குலம் கோத்திரங்களைக் குறித்தோ இழிவாகப் பேசக்கூடாது. ஏனெனில் அவன் இப்பொழுது கர்த்தருடைய நண்பனும் ஆசாரியனும் தேவன் தங்கும் வாசஸ்தலமாயும் இருக்கிறானே! ஒருவரை ஒருவர், மேன்மையுள்ளவர்களாய் எண்ணுங்கள்.

YOUR ATTENTION PLEASE:

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The Voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 3815 New Delhi-110049.
Mondays-9 : 00to 9 : 15 P. M.
Fridays-7 : 45 to 8 : 00 P. M.

**HINDI**—Satya Susamachar-Speaker : Sunny David.
All correspondence should be sent to Satya-Susamachar, Post Box 3815, New Delhi-110049.
Tuesdays-9 : 00 to 9 : 15 P. M.
Thursdays-9 : 00to 9 : 15 P. M.
Fridays-9 : 00 to 9 : 15 P. M.
Sundays-12 : 45 to 1 : 00 P. M.

**TELUGU**—The Voice of Truth-Speaker: Joshua Gootam
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 80, Kakinada-533001.
Sundays-2 : 30 to 2 : 45 P. M.
Tuesdays-2 : 30 to 2 ; 45 P. M.
Thursdays–2 : 30 to 2 : 45 P. M.
Fridays-2 : 30 to 2 : 45 P. M
Saturdays-2 : 30 to 2 : 45 P. M.

**TAMIL**—The Way of Truth-Speaker : P. R. Swamy.
All correspondence should be sent to The Way of Truth, Post Box 8405, Bangalore-560084.
Tuesdays-5 : 30 to 5 : 45 P. M.
Thursdays-6 : 45 to 7 : 00 P. M.
Sundays-6 : 45 to 7 : 00 P. M.

**MALAYALAM**—The Voice of Truth-Speaker : P. K. Varghese
All corespondence should be sent to Church of Christ Thevally, Quilon-9 (Kerala.)
Tuesdays,3 : 45 to 4 : 00 P. M.
Fridays-3 : 45 to 4 : 00 P. M.

**KANNADA**—The Voice of Truth—Speaker : Robert Rathnakar
Box No 448, Bangalore-560004
Sunday: 1-45 2-00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the addresses listed. Also the radio sermons are available in book form.

# வாசக அன்பர்களுக்கு ஓர் நற்செய்தி.

வளர்ந்து வரும் திருமறை ஆசானின் கடிதத் தொடர்புகளை சிறந்த முறையில் நிர்வாகம் செய்வதற்கு வசதியாக நமக்கு ஒரு தபால் பெட்டி கிடைக்க தேவன் உதவி செய்தார்.

இனிமேல் உங்கள் கடிதங்களையும் இதரத் தொடர்புகளையும் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புமாறு கிறிஸ்தவ அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

ஆசிரியர்
திருமறை ஆசான்,
தபால் பெட்டி எண்: 310
ஈரோடு-638 001.

Published by Church of chirst and Printed bySri. vela E V. Rajamanickam at vela Printers, Erode-638 001. Phone: 74878
Editor. E. Z. Selvanayagam.

If undelivered please return to;
The Editor
THIRUMARAI AASAAN.
2, Manal Medu Street,
ERODE-638 002. (or)
Post Box No: 310. ERODE-638 001.

TO

PRINTED MATTER

BOOK-POST